**செய்தி வெளியீடு எண்: 429** **நாள்: 16.07.2019**

**செய்தி வெளியீடு**

இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஆர்யா (எ) பாஷ்யம், சங்கரலிங்கனார், செண்பகராமன் ஆகியோரின் அருந்தொண்டினைப் போற்றிடும் வகையில் தியாகிகள் தினம் அரசின் சார்பில் கொண்டாடப்படுகிறது. தியாகிகள் தினத்தை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை (17.7.2019) காலை 8.30 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், தியாகிகள் ஆர்யா (எ) பாஷ்யம், சங்கரலிங்கனார், செண்பகராமன் ஆகியோரின் தியாகத்தை நினைவுகூறும் வகையில் ஜுலை 17ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் தியாகிகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சுதந்திரப் போராட்ட வீரர், தியாகி ஆர்யா(எ) பாஷ்யம் அவர்கள், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், சேரங்குளத்தில் 1907ஆம் ஆண்டு பிறந்தார். தன்னுடைய 11ஆம் வயதில் பஞ்சாபில் நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலைகளைக் கேள்விப்பட்டு ஆவேசம் கொண்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தியடிகளின் சொற்பொழிவைக் கேட்டு தேசத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். சைமன் கமிஷன் திருச்சி வந்தபோது அதனை எதிர்த்துப் போராடினார். 1932ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று நள்ளிரவு 12 மணி அளவில் ரகசியமாக செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் நுழைந்து, அங்கு 140 அடி உயரமும் 3 அடி அகலமும் உள்ள கம்பத்தில் ஏரிய தியாகி ஆர்யா(எ) பாஷ்யம் அவர்கள் யூனியன் ஜாக்கை இறக்கிவிட்டு அதில் தேசியக் கொடியை ஏற்றினார். 1942ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆகஸ்ட் புரட்சியில் கலந்துகொண்டார். தியாகி பாஷ்யம் அவர்கள் ஓர் ஓவியர் ஆவார். இவர் ஆர்யா எனும் புனைப் பெயருடன் முழுநேர ஓவியராக இருந்தார். தியாகி ஆர்யா அவர்கள் வரைந்த பாரதியாரின் ஓவியம் பின்னாளில் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தியாகி சங்கரலிங்கனார் அவர்கள், விருதுநகரில் உள்ள மண்மலைமேடு கிராமத்தைச் சேர்ந்த பெரிய கருப்பசாமி – வள்ளியம்மை தம்பதியினருக்கு 1895ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். 1914ஆம் ஆண்டு பெண் கல்வி வளர்ச்சிக்கான சங்கத்தின் செயலாளராகப் பதவி வகித்தார். தியாகி சங்கரலிங்கனார் அவர்கள், 1920ஆம் ஆண்டு இராஜாஜியை சந்தித்தபோது அவரது சீடரானார். கதர் இயக்கத்தில் சேர்ந்து கதர் வளர்ச்சிப் பணியை மேற்கொண்டார். இன்றைய தமிழகத்தின் பெயர் சென்னை மாகாணம் என இருந்தபோது அப்பெயரை மாற்றித் தமிழ்நாடு எனப் பெயரிட வேண்டும் எனக்கோரி 27.07.1956 அன்று முதல் 13.10.1956 வரை 76 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு தனது 58ஆவது வயதில் இன்னுயிரை ஈந்த தியாகச் செம்மல் தியாகி சங்கரலிங்கனார் ஆவார்.

தியாகி செண்பகராமன் அவர்கள் திருவனந்தபுரம் புத்தன் சந்தை என்ற ஊரில் 15.9.1891 அன்று சின்னச்சாமி பிள்ளை– நாகம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். 1905ஆம் ஆண்டு திருவனந்தபுரம் மகாராஜா பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது ஆங்கில அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். செண்பகராமன் அவர்கள் 22.9.1908 அன்று தனது பதினேழாம் வயதில் தாய்நாட்டை விட்டுப் புறப்பட்டு ஜெர்மனிக்குச் சென்று அங்கிருந்துகொண்டே இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். தாய்நாட்டை வணங்க முதன்முதலில் “ஜெய்ஹிந்த்” எனும் கோஷத்தை உருவாக்கி முழங்கியவர் தியாகி செண்பகராமன் அவர்கள் ஆவார். இந்திய விடுதலைக்காக உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டு சர்வதேச இந்திய ஆதரவுக்குழு என்ற அமைப்பை நிறுவி, இந்திய ஆதரவு என்ற பத்திரிகையை வெளியிட்டார். இந்திய தேசியத் தொண்டர் படையை உருவாக்கினார். இது நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் உருவாக்கிய இந்திய தேசிய இராணுவத்திற்கு முன்னோடியாகும். ஹிட்லர் இந்தியாவையும் இந்தியர்களையும் கேவலமாகப் பேச, அதனை வன்மையாகக் கண்டித்த செண்பகராமன் அவர்கள் ஹிட்லரை மன்னிப்பு கேட்கவைத்தார். 26.5.1934 அன்று தியாகி செண்பகராமன் அவர்கள் உயிர் நீத்தார்.

தியாகிகள் தினத்தை முன்னிட்டு சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(7.6.2019) காலை 8.30 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**